நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, எல்.எல்.எம்.,

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் **12-**ஆம் நாள் புதன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**11/2011**

**CNR.No.TNMD16-000015-2011**

...

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>ஒத்தக்கடை காவல்நிலையம்<br>குற்ற எண்.376/2010 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : முத்துச்சாமி, (வயது 61/2026)<br>த/பெ.ராக்கப்பன்,<br>5/34, முனியாண்டிபுரம்,<br>ஒத்தக்கடை, மதுரை மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | : எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச |
| குற்றம் வனையப்பட்டது | : எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச-ன் கீழ் குற்ற முகாந்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : 07.07.2010 காவல்நிலைய பிணை |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : 22.02.2011 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : U/s.311 Cr.P.C in Crl.M.P.No.2419 of 2024 = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 28.08.2012 | 28.02.2012<br>02.07.2025 |
| PW2 | 11.06.2013 | 02.07.2025 |
| PW3 | 11.06.2013 | Nil |
| PW4 | 11.06.2013 | 02.07.2025 |
| PW5 | 11.06.2013 | Nil |
| PW6 | 11.06.2013 | Nil |
| PW7 | 11.07.2013 | Nil |
| PW8 | 20.02.2017 | 20.02.2017 |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:28:31 +0530

| | | |
|---|---|---|
| PW9 | 03.02.2018 | 03.02.2018 |
| PW10 | 16.10.2018 | Nil |
| PW11 | 28.05.2024 | 28.05.2024 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 03.06.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | Nil |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | N.A |
| தீர்மானம் | : | எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, இவ்வழக்கில் எழுந்துள்ள ஒட்டுமொத்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி பிரிவு 304(A) இ.த.ச-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும். |

இவ்வழக்கானது கடந்த 07.04.2011-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 12.08.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.C.மாணிக்கம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை :-</u>

எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச-ன் கீழ் குற்ற முகாந்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:28:46 +0530

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

கடந்த 06.07.2010-ம் தேதி 22.30 மணியளவில் சேதுராமன் என்பவர் சீதாலெட்சுமி நகரில் தன் வீட்டு முன்பு நின்று கை, கால்கள் அலம்பி கொண்டு இருந்தபோது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி TN 59 AC 2246 என்ற பதிவு எண் கொண்ட மூன்று சக்கர லோடு ஆட்டோவை ஓட்டி வந்த ஓட்டுனர் லோடு ஆட்டோவை வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டிவ வந்து, சேதுராமலிங்கத்தின்மீது மோதியதால் கீழே விழுந்த சேதுராமலிங்கம் உள் காயம்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு சிகிச்சையில் இருந்த சேதுராமலிங்கம் 07.07.2010-ம் தேதி இரவு 12.30 மணியளவில் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துள்ளார். எனவே சேதுராமலிங்கத்திற்கு இறப்பை ஏற்படுத்திய தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்தவர்களாகிறார் என்று ஒத்தக்கடை காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.11/2011 ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழாக எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, எதிரி மீது பிரிவு 304(A) இ.த.ச-ன்கீழ் குற்ற முகாந்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேற்படி குற்ற முகாந்திரத்திற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 18.10.2011 அன்று எதிரி மீது குற்ற முகாந்திரம் எடுத்துரைத்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.11 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.5-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.9-ன் மூலம் அ.சா.ஆ.3-ம், அ.சா.11 மூலம் அ.சா.ஆ.4 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>**4)** அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்</u> **:-**

**4.1)** அ.சா.1 கண்ணன் தனது சாட்சியத்தில் இறந்துபோன சேதுராமலிங்கம் தனது சித்தப்பா என்றும், எதிரியை தெரியும் என்றும், கடந்த 06.07.2010-ம் தேதி இரவு 10.30



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:28:51 +0530

மணியளவில் தனது சித்தப்பா கதிரவன் வீட்டிற்கு முன்னால் கை கால் அளம்பி கொண்டு இருந்தார் என்றும், அப்போது ஒரு மூன்று சக்கர லோடு ஆட்டோ அதிவேகமாக, ஹாரன் அடிக்காமல் வந்த வேகத்தில் தனது சித்தப்பா மேல் இடித்துவிட்டது என்றும், தனது சித்தப்பா மயங்கி கீழே விழுந்துவிட்டார் என்றும், உடன் வேறொரு ஆட்டோவில் தனது சித்தப்பாவை மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், சிகிச்சை பலன் அளிக்காமல் அன்று இரவு 12 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், பின்னர் ஒத்தக்கடை காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையொழுத்து தன்னுடையது தான் என்றும், இந்த விபத்து மூன்று சக்கர லோடு ஆட்டோ அதிகவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்ததால் தான் விபத்து நடந்தது என்றும், எதிரி தான் அந்த ஆட்டோவை ஓட்டி வந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 கண்ணகி தனது சாட்சியத்தில் இறந்துபோன சேதுராமன் தனது சின்ன மாமனார் என்றும், கடந்த 06.07.2010-ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் வீட்டிற்கு வெளியே கை கால்களை கழுவிக்கொண்டிருந்தார் என்றும், எதிரி கிழக்குமுகமாக குட்டியானை வாகனத்தை ஓட்டிவந்து தனது சின்ன மாமனார் மீது மோதிவிட்டார் என்றும், அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், எதிரியை தனக்கு தெரியும் என்றும், தனது கணவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.3)** அ.சா.3 கதிரவன் தனது சாட்சியத்தில் கடந்த 06.07.2010-ம் தேதி இரவு 10.30 மணிக்கு தனது வீட்டின் முன்பு கண்ணனின் சித்தப்பா பாத்ரூம் ஓரமாக கை கால்களை கழுவிக்கொண்டிருந்தார் என்றும், ஒரு லோடு ஆட்டோ கிழக்கு நோக்கி நல்ல வேகமாக வந்து அவர் மீது மோதியது என்றும், அவர் கீழே மயங்கி விழுந்துவிட்டார் என்றும், ஆட்டோ மூலமாக அவரை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்கள் என்றும், அங்கு அவர் இறந்துவிட்டார் என்றும், அதன் பதிவு எண்.டி.என்.59.எ.சி. 2246 என்றும், வண்டி ஓட்டி வந்தவர் எதிரி முத்துச்சாமி தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.4)** அ.சா.4 வள்ளிநாயாகம் தனது சாட்சியத்தில் கடந்த 06.07.2010-ம் தேதி இரவு 10.30 மணிக்கு மேற்கிலிருந்து வந்த ஒரு லோடு ஆட்டோ வேகமாக வந்து கை கால்களை கழுவிக்கொண்டிருந்த சித்தப்பா சேதுராமலிங்கம் மீது மோதியது என்றும், ஆட்டோ மூலமாக அவரை பெரியாஸ்பத்திரி கொண்டு சென்றனர் என்றும், அங்கு அவர் இறந்துவிட்டார் என்றும்,



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:28:57 +0530

வண்டியை ஓட்டி வந்தவர் எதிரி தான் என்றும், வண்டி எண்.டி.என்.59. 2249 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 அருள்கனி தனது சாட்சியத்தில் கடந்த 07.07.2010-ம் தேதி காலை போலீசார் தனது தாத்தாவுக்கு விபத்து ஏற்பட்ட இடத்தை பார்த்து படம் வரைந்தார்கள் என்றும், அதில் தானும், பிச்சை என்பவரும் கையெழுத்து செய்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வை மகஜரிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.6)** அ.சா.6 பிச்சை தனது சாட்சியத்தில் கடந்த 07.07.2010-ம் தேதி விபத்து நடந்த இடத்தை பார்த்து படம் வரைந்தார்கள் என்றும், அதில் தானும், மற்றொருவரும் கையெழுத்து செய்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.7)** அ.சா.7 முத்துலெட்சுமி தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோனவரை தெரியும் என்றும், கடந்த 06.07.2010-ம் தேதி தானும், தனது கணவர் மற்றும் மற்றவர்கள் தனது வீட்டு முன்பாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், இடதுபுறமாக இருந்த பாத்ரூமிற்கு வெளியே சேதுராமன் கை கழுவிக்கொண்டிருந்தார் என்றும், அப்போது 3 சக்கர ஆட்டோ ஒன்று மேற்கிலிருந்து கிழக்காக வந்து சேதுராமன் மீது மோதியது என்றும், வாகனத்தை ஓட்டி வந்தவர் எதிரி தான் என்றும், ஒரு ஆட்டோ மூலம் சேதுராமனை பெரியாஸ்பத்திரியில் சேர்த்தார்கள் என்றும், அங்கு வைத்து இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.8)** அ.சா.8 சந்திரா தனது சாட்சியத்தில் கண்ணனை தனக்கு தெரியும் என்றும், கண்ணனின் சித்தப்பா பெயர் சேதுராமலிங்கம் என்று கேள்விபட்டுள்ளார் என்றும், கண்ணனின் சித்தப்பாவை பார்த்துள்ளார் என்றும், எதிரியை தனக்கு தெரியாது என்றும், இவ்வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**4.9)** அ.சா.9 சிவராமசுப்பிரமணியன் தனது சாட்சியத்தில் அ.சா.9 சிவராமசுப்பிரமணியன் தனது சாட்சியத்தில் கடந்த 07.07.2010-ம் தேதி மதுரை மருத்துவக்கல்லூரியின் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பயிற்றாசிரியராக பணியிலிருந்தபோது சேதுராமலிங்கம் என்ற ஆண் பிரேதத்தை பிரேதப்பரிசோதனை செய்யுமாறு ஒத்தக்கடை காவல்நிலையத்தின் உதவி ஆய்வாளரிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு பிரேதப்பரிசோதனை செய்தார் என்றும், கடந்த 07.07.2010-ம் தேதி சுமார் 12.45 மணிக்கு பிரேதத்தை சடலக்கூறாய்வு செய்தார் என்றும்,



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:02 +0530

அதில் பின்வருமாறு பிரேதமானது அதன் உடல் முழுவதும் பிணவிரைப்புதன்மையுடன் காணப்பட்டது என்றும், பிரேதமானது நடுத்தர ஊட்டத்துடன் கூடிய சுமார் 65 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதம் என்றும், அதன் கை, கால் நகங்கள் நீல நிறத்துடன் காணப்பட்டது என்றும், பிரேதத்தின் இடுப்பு எலும்பு அதன் வலது பக்கத்தில் முறிந்து காணப்பட்டது என்றும், இடுப்புக்குழியில் சுமார் 500 மில்லி அளவுள்ள திரவ இரத்தம் மற்றும் உறைந்த இரத்தம் காணப்பட்டது என்றும், பிரேதத்தின் இடுப்புக்குழி முன்பே விவரிக்கப்பட்டது என்றும், இருதய சவ்வு இடைவெளியில் சுமார் 15 மில்லி அளவுள்ள வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது என்றும், இருதயம் அதன் நான்கு அறைகளிலும் காலியாக காணப்பட்டது என்றும், இருதய தமணிகள் சாதாரணமாக காணப்பட்டது என்றும், நுரையீரல் அதன் வெட்டுத்தோற்றத்தில் வெளிறி காணப்பட்டது என்றும், இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட இடுப்புக்காயங்களால் உண்டான இரத்தப்போக்கு மற்றும் அதன் விளைவாக குறைந்த இரத்த அழுத்த அதிர்ச்சியினால் இறந்திருக்கலாம் என சான்று வழங்கினார் என்றும், அந்த சடலக் கூராய்வு அறிக்கை அ.சா.ஆ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.10)** அ.சா.10 சந்திரசேகர் தனது சாட்சியத்தில் கடந்த 07.07.2010-ம தேதி ஒத்தக்கடை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது குற்ற எண்.376/2010, பிரிவு 304(A) இ.த.ச வழக்கின் இறந்துபோன சேதுராமலிங்கம் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக வேண்டுகோள் கடிதத்தை ஆய்வாளரிடம் பெற்று பிரேத கிடங்கில் மருத்துவரிடம் கொடுத்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தார் என்றும், பிரேத பரிசோதனை முடிந்த பின்பு பிரேதத்தினை நல்லடக்கம் செய்வதற்காக அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.11)** அ.சா.11 சுப்பையா தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் மேல் வசாரணை மேற்கொண்ட கோபாலகிருஷ்ணன் இறந்துவிட்டார் என்றும், இவ்வழக்கில் சாட்சிகள் சார்பு ஆய்வாளர் தாலை ராமச்சந்திரன், புலன்விசாரணை அதிகாரியான ஆய்வாளரான திரு.செந்தில் இளந்தரையன் ஆகியோருடன் பணிபுரிந்துள்ளார் என்றும், கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு தெரியும் என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறார் என்றும், மேற்படி சார்பு ஆய்வாளர் 07.07.2010-ம் தேதி கை;ல் 08.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது சிவசுப்பிரமணி என்பவர் மகன் கண்ணன் என்பவர் நிலையம் கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 376/2010 இதச பிரிவு 304 (A)ன் கீழ் வழக்கு பதிவு செய்து 07.07.2010ம் தேதி காலை 09.00 மணிக்கு



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:07 +0530

சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருள்கணி மற்றும் பிச்சை ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தும் மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அன்றைய தினம் மதுர் அரசு மருத்துவமனையில் வைத்து இறந்த சேதுராமலிங்கம் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், மேலும் சாட்சிகள் கண்ணன். கண்ணகி, கதிரவன், முத்துலெட்சுமி வள்ளிநாயகம், சந்திரா, அருள்கனி மற்றும் பிச்சை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேலும் பிரேதத்தை பிரிதே பரிசோதனைக்காக அனுப்பியுள்ளார் என்றும், மேல்விசாரணை அதிகாரி வாகனத்தினை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வளாரை 09.08.2010ம் தேதி விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார் என்றும், ஆய்வாளர் திரு. கோபாலகிருஷ்ணன் மருத்துவரை 08.11.2010 அன்று விசாரித்து அறிக்கை பெற்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், பார்வை மகஜர் அ.சா.ஆ.5 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 என்றும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 என்றும், மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.7 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)**(ஆ)**-**ன் கீழான விசாரணை

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார். மேலும் அவர் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார். அதனால் எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** அரசு தரப்பு வாதம் பின்வருமாறு**:**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் குற்றம் புரிந்துள்ளார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:12 +0530

**7) எதிரி தரப்பில் வாதம் பின்வருமாறு:**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரி மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8) தீர்வு :-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** கடந்த 06.07.2010-ம் தேதி 22.30 மணியளவில் சேதுராமன் என்பவர் சீதாலெட்சுமி நகரில் தன் வீட்டு முன்பு நின்று கை, கால்கள் அலம்பி கொண்டு இருந்தபோது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி TN 59 AC 2246 என்ற பதிவு எண் கொண்ட மூன்று சக்கர லோடு ஆட்டோவை ஓட்டி வந்த ஓட்டுனர் லோடு ஆட்டோவை வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து, சேதுராமலிங்கத்தின் மீது மோதியதால் கீழே விழுந்த சேதுராமலிங்கம் உள் காயம்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு சிகிச்சையில் இருந்த சேதுராமலிங்கம் 07.07.2010-ம் தேதி இரவு 12.30 மணியளவில் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துள்ளார். எனவே சேதுராமலிங்கத்திற்கு இறப்பை ஏற்படுத்திய குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10) இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்**

i) சம்பவ தினத்தன்று எதிரி TN 59 AC 2246 என்ற பதிவு எண் கொண்ட மூன்று சக்கர லோடு ஆட்டோவை ஓட்டி வந்தார் என்பது அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

ii) அவ்வாறு எனில் மேற்படி TN 59 AC 2246 என்ற பதிவு எண் கொண்ட மூன்று சக்கர லோடு ஆட்டோவை எதிரி முரட்டுத் தனமாகவோ, அல்லது கவனக்குறைவாகவோ மனித உயிருக்கு ஆபத்து மற்றும் காயம் விளைவிக்கும் வகையில் பொது பாதையில் ஓட்டி வந்தார் என்பதை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

iii) மேலும் எதிரி மேற்படி முரட்டுத்தனமான அல்லது கவனமற்ற செய்கையால் ஒருவருக்கு மரணத்தை விளைவித்தார் என்பது அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:17 +0530

iv) எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எல்லாவித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**11)** பிரச்சனைக்கான தீர்வு மற்றும் காரணங்கள்

இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருப்பதால் அனைத்து பிரச்சனைகளும் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது.

**11.1)** சாட்சிகளை பரிசீலனை செய்யும் முன்பாக இ.த.ச பிரிவு 304(A)-ன் ஆக்க கூறுகளை பார்க்க வேண்டியது. சாலை விபத்து வழக்குகளில் ஒரு நபரை இ.த.ச பிரிவு 304(A)-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்ய வேண்டும் என்பதால் அரசு தரப்பில் பின்வரும் கூறுகளை நிரூபிக்க வேண்டும்.

i) முதலாவதாக இறந்த நபர் விபத்தின் காரணமாக இறந்திருக்க வேண்டும்.

ii) இரண்டாவதாக எதிரி தான் விபத்திற்கு காரணமாக இருக்க வேண்டும்.

iii) மூன்றாவதாக எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் அந்த விபத்து ஏற்பட்டிருக்க வேண்டும்.

**12)** முதலாவதாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் இறந்துபோன சேதுராமலிங்கம் தனது சித்தப்பா என்றும், எதிரியை தெரியும் என்றும், கடந்த 06.07.2010-ம் தேதி இரவு 10.30 மணியளவில் தனது சித்தப்பா கதிரவன் வீட்டிற்கு முன்னால் கை கால் அளம்பி கொண்டு இருந்தார் என்றும், அப்போது ஒரு மூன்று சக்கர லோடு ஆட்டோ அதிவேகமாக, ஹாரன் அடிக்காமல் வந்த வேகத்தில் தனது சித்தப்பா மேல் இடித்துவிட்டது என்றும், தனது சித்தப்பா மயங்கி கீழே விழுந்துவிட்டார் என்றும், உடன் வேறொரு ஆட்டோவில் தனது சித்தப்பாவை மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், சிகிச்சை பலன் அளிக்காமல் அன்று இரவு 12 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், பின்னர் ஒத்தக்கடை காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையொழுத்து தன்னுடையது தான் என்றும், இந்த விபத்து மூன்று சக்கர லோடு ஆட்டோ அதிகவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்ததால் தான் விபத்து நடந்தது என்றும், எதிரி தான் அந்த ஆட்டோவை ஓட்டி வந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "அந்த ரோடு 10 அடி அகலம் இருக்கும். லோடு ஆட்டோவின் அகலம் 4 அடி இருக்கும் என்றால் சரிதான். எங்கள் வீட்டு அருகில் இரண்டு வேகத்தடைகள் உள்ளன என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகே ஒரு வேகத்தடை இருக்கிறது. பொதுவாக எல்லா வாகனங்களும்


THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:22 +0530

வேகத்தடையில் நிறுத்தி தான் செல்லவேண்டும் என்றால் சரிதான்." என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே அவரது சாட்சியத்தின் மூலம் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே வேகத்தடை இருந்தது தெரியவருகிறது. மேலும் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "என் சித்தப்பா ஆட்டோவின் எந்த பகுதியில் மோதினார் என்றால் அவர் மோதவில்லை, ஆட்டோ இடது பக்கம் மோதியது.” மேலும் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "இறந்துபோன சித்தப்பாவிற்கு எங்கு, எங்கு காயங்கள் என்று சொன்னோமா என்றால் இல்லை.” என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மீண்டும் அ.சா.1 நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்தபோது அவர் தனது குறுக்கு விசாரணையில் "எனது சித்தப்பாவிற்கு எந்த இடத்தில் காயங்கள் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.” என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே விபத்தின் காரணமாக சேதுராமலிங்கத்திற்கு காயம் ஏற்பட்டதாகவும், அதனால் அவர் இறந்துவிட்டதாகவும் அ.சா.1-ன் சாட்சியம் அமையவில்லை.

**13)** அதன் பின்னர் விசாரிக்கப்பட்ட அ.சா.2 தனது சாட்சியத்தில் இறந்துபோன சேதுராமன் தனது சின்ன மாமனார் என்றும், கடந்த 06.07.2010-ம் தேதி இரவு சுமார் 10.30 மணியளவில் வீட்டிற்கு வெளியே கை கால்களை கழுவிக்கொண்டிருந்தார் என்றும், எதிரி கிழக்குமுகமாக குட்டியானை வாகனத்தை ஓட்டிவந்து தனது சின்ன மாமனார் மீது மோதிவிட்டார் என்றும், அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்று அங்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், எதிரியை தனக்கு தெரியும் என்றும், தனது கணவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**14)** மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "அந்த வாய்க்காலில் தான் எதிரி ஆட்டோவில் வேகமாக வந்து மோதி, எனது மாமனார் விழுந்து கிடந்தார், சடாரென்று சத்தம் கேட்டு நாங்கள் சென்று பார்த்தோம். எனது மாமனார் வாய்க்காலில் விழுந்து கிடந்தாரா என்றால் சரிதான். சத்தம் கேட்டு யார் யார் ஓடி வந்தீர்கள் என்றால் நான், எனது மகன்கள், சந்திலிருந்து ஓடி வந்தோம். யார் எனது மாமனாரை முதலில் தூக்கினார்கள் என்றால், நான், எனது கணவர், எனது மகன் ஆகியோர் தூக்கினோம். அவருக்கு வெளிப்புறமாக அடிப்பட்ட காயங்கள் ஏதேனும் இருந்ததாக ஞாபகமுள்ளதா என்றால் காயங்கள் ஏதுமில்லை." என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே அ.சா.2-ன் சாட்சியத்தின் அடிப்படையில் சத்தம் கேட்டு தான் சம்பவ இடம் சென்றதாகவும், அங்கு சேதுராமலிங்கம் சாக்கடைக்குள் கிடந்ததாகவும், அதை அவர் சென்று பார்த்ததாகவும் தெரியவருகிறது. மேலும் அவரது



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:26 +0530

சாட்சியத்தின் அடிப்படையில் சம்பவ சமயத்தில் அவருடன் இருந்தவர்கள் அ.சா.1 மற்றும் அவரது மகன் மட்டும் என்பது தெரியவருகிறது. அ.சா.2-ன் சாட்சியத்தில் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளான சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லப்படும் கதிரவன், வள்ளிநாயகம், முத்துலெட்சுமி, சந்திரா ஆகியோர்களை குறித்து அ.சா.2 சாட்சியம் அளிக்கவில்லை. எனவே இவர்கள் சம்பவ சமயத்தில் அங்கு தான் இருந்தார்களா என்று சந்தேகம் எழுகிறது.

**15)** மேலும் இவ்வழக்கில் இறந்தவரின் பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்கிய அ.சா.9 சிவராமசுப்பிமணியனின் சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்ததில் அவர் சாட்சியம் அளித்த போது பிரேத உடலின் வெளியில் எந்தவிதமான வெளிகாயங்களும் காணப்படவில்லை. மேலும் அவரின் இடுப்பு எலும்பு அதன் வலது பக்கத்தில் முறிந்து காணப்பட்டது என்றும், இறப்பின் காரணமாக அவர் இறந்த நபருக்கு இடுப்பு காயங்களால் உண்டான இரத்தப்போக்கு மற்றும் அதன் விளைவான குறைவான இரத்த அழுத்த அதிர்ச்சியால் இறந்திருக்கலாம் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.9-ன் சாட்சியத்தின் அடிப்படையில் இறந்தவரின் உடலில் வெளிப்படையான காயங்கள் இல்லை என்றும், வலதுபுற இடுப்பு எலும்பு முறிந்திருந்ததாகவும் சொல்லியுள்ளார். ஆனால் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சேதுராமலிங்கத்தின் இடது பின்புறம் வாகனம் மோதியதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியமும், மருத்துவ சாட்சியமும் முன்னுக்குப்பின் முரணாக அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை.

**16)** மேலும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது, சம்பவத்திற்கு மறுநாள் கொடுக்கப்பட்டது. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால், ஓரளவு தெரியும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை யார் எழுதியது என்றால், கதிரவன் எழுதியிருக்கலாம் அல்லது போலீசார் எழுதியிருக்கலாம், சரியாக ஞாபகமில்லை. புகாரை யார் எழுதினார் என்று எனக்கு சரியாக தெரியாது என்றால் சரிதான்." என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் புகார் மனுவானது அவரால் தான் எழுதப்பட்டது என்று சந்தேகம் எழுகிறது.

**17)** அ.சா.7 முத்துலெட்சுமி தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோனவரை தெரியும் என்றும், கடந்த 06.07.2010-ம் தேதி தானும், தனது கணவர் மற்றும் மற்றவர்கள் தனது வீட்டு முன்பாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், இடதுபுறமாக இருந்த பாத்ரூமிற்கு வெளியே சேதுராமன் கை கழுவிக்கொண்டிருந்தார் என்றும், அப்போது 3 சக்கர ஆட்டோ ஒன்று மேற்கிலிருந்து கிழக்காக வந்து சேதுராமன் மீது மோதியது என்றும், வாகனத்தை ஓட்டி



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:32 +0530

வந்தவர் எதிரி தான் என்றும், ஒரு ஆட்டோ மூலம் சேதுராமனை பெரியாஸ்பத்திரியில் சேர்த்தார்கள் என்றும், அங்கு வைத்து இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18)** இவ்வழக்கில் அ.சா.1, அ.சா.2 தங்களது சாட்சியத்தில் அவர்களது வீட்டின் முன்னாள் நின்று பேசிக்கொண்டிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். ஆனால் அ.சா.7 முத்துலெட்சுமி மற்றும் அவரது கணவரான அ.சா.3 அவர்களது வீட்டின் முன்னால் நின்று பேசிக்கொண்டிருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே இவர்கள் இருவரும் சம்பவ இடத்தில் சம்பவ சமயத்தில் இருந்தார்களா என்று சந்தேகம் எழுகிறது.

**19)** இவ்வழக்கில் அனைத்து சாட்சிகளும் சேதுராமலிங்கம் கீழே விழுந்து இறந்ததாகவே சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்களது சாட்சியத்தின் மூலம் எதிரி வாகனத்தை கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து சேதுராமலிங்கம் மீது மோதி அவருக்கு காயம் ஏற்பட்டு இறந்ததாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20)** எனவே சம்பவ விபத்தானது எதிரி TN 59 AC 2246 என்ற பதிவு எண் கொண்ட மூன்று சக்கர லோடு ஆட்டோவை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், அதிவேகமாவும் இயக்கி சேதுராமலிங்கம் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பு சாட்சிகளால் போதிய சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**21)** முடிவாக எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி இ.த.ச பிரிவு 304(A)-ன்படி குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**22)** இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**23)** மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:40 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம்/சாட்சியின் தன்மை |
|---|---|---|---|
| அ.சா.1 | 28.08.2012 | கண்ணன் | புகார்தாரர் |
| அ.சா.2 | 11.06.2013 | கண்ணகி | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.3 | 11.06.2013 | கதிரவன் | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.4 | 11.06.2013 | வள்ளிநாயகம் | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.5 | 11.06.2013 | அருள்கனி | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | 11.06.2013 | பிச்சை | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.7 | 11.07.2013 | முத்துலெட்சுமி | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.8 | 20.02.2017 | சந்திரா | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.9 | 03.02.2018 | சிவராமசுப்பிரமணியன் | மருத்துவர் |
| அ.சா.10 | 16.10.2018 | சந்திரசேகர் | முதல்நிலை காவலர் |
| அ.சா.11 | 28.05.2024 | சுப்பையா | புலன்விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | குறியீடு செய்த சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | அ.சா.5 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.5-ன் சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | அ.சா.9 | சடலக்கூராய்வு அறிக்கை |
| அ.சா.ஆ.4 | அ.சா.11 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | அ.சா.11 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | அ.சா.11 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | அ.சா.11 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | அ.சா.11 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:47 +0530

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்</u>**:-** <u>இல்லை</u>

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>,
<u>குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:** இல்லை
<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணைகாலத்தில், எதிரி நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.08.12 06:29:52 +0530